# இலங்கையர்கள் அனைவருக்கும் ஒரு முக்கிய அறிவித்தல்

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கை பெற்றோருக்கு பிள்ளை பிறந்தால் அவர்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் தம் பிள்ளைக்காக குடியுரிமை சான்றிதழை பெற்றுக்கொளவதட்கான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். தம் பிள்ளைக்கு இலங்கை குடியுரிமை பெற்றுக்கொள்வதட்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தகுதியாவதட்கு பெற்றோரில் ஒருவராவது இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.

பிள்ளையின் பிறப்பு பதிவும் குடியுரிமை பெற்றுக்கொளவதட்கான விண்ணப்பம் சமர்பிப்பதுவும் வழமையாக ஒரே நேரத்தில், இலங்கை கொண்சுயுலேட ஜெனரல் காரியாலயத்தில் / இலங்கை தூதுவராலயத்தில் செய்யப்படவேண்டும். அத்தோடு இவ்வாறு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை சமர்பிப்பதற்கு திர்ஹம் 170 /= கட்டணமாக அறவிடப்படும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 10 முதல் 12 மாதங்கள் சென்ற பின்னர் குடியுரிமை சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும். தயவு செய்து பெற்றோர்கள் குடியுரிமை சான்றிதழை பெற்றுக்கொளவதட்கான கட்டணம் அறவிட்டப்பின்னர் கொடுக்கப்படும் பற்றுச்சீட்டை, குடியுரிமை சான்றிதழை பெற்றுக்கொள்ளும்வரை கவனமாக வைத்துக்கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

இவ்வாறு பெறப்பட்ட குடியுரிமை சான்றிதழ் மிகவும் கவனமாக வைத்துக்கொள்ளப்பட வேண்டும் இந்த குறிப்பிட்ட பிள்ளைக்காக கடவுச்சீட்டு புதுப்படுத்தல் அல்லது புதிய கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் வேளைகளில் இதன் மூலப்பிரதியை காட்டவேண்டும்.

மேலும் இலங்கைக்கு வெளியே 2011 ஆம் ஆண்டு அல்லது அதட்கு முன் பிறந்து இருந்தால் தனது 18 ஆவது வயதிலும் 2011 ஆம் ஆண்டுக்கு பின் பிறந்திருந்தால் தனது 21 ஆவது வயதிலும் இலங்கையிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திட்கு போய் அங்கே குடியுரிமை சம்பந்தப்பட்ட பிரிவில் உள்ள அதிகாரியின் முன்னால் , 1948 ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் திகதியில் மாற்றம் செய்யப்பட இலங்கை குடியுரிமை சட்டத்திட்கு ஏற்ப, தான் தொடர்ந்தும் இலங்கை பிரஜாவுரிமையை தக்க வைத்துக்கொள்ள விரும்புவதாக கட்டாயமாக அறிவிக்க வேண்டும். இது சம்பந்தப்பட்ட குறிப்பு குடியுரிமை சான்றிதழின் கீழ்ப் பகுதியில் இடப்பட்டுள்ளது.

மேற் சொன்னவாறு குறிப்பிடப்பட்ட காலத்தில் அறிவிக்கத் தவறியவர்கள் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கை தூதரகங்கள் மூலமாக புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாது மேலும் அதே போல் தன்னிடமுள்ள கடவுச்சீட்டை பாவித்து மீளவும் இலங்கைக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ பிரயாணம் செய்யமுடியாது ஏனெனில் குடிவரவு குடியகல்வு திணைக்களம், அவர்கள் இலங்கை குடியுரிமை சட்டத்திட்கு ஏற்ப தான் தொடர்ந்தும் இலங்கை பிரஜை அல்ல என அறிவித்ததாக கருதி அவர்கள் தனது பிரஜாவுரிமையை தக்க வைத்துக்கொள்ள விரும்பவில்லை என முடிவெடுக்கும்.

எனவே இவ்வாறு இலங்கைக்கு வெளியே பிறந்த இலங்கையர்கள் தாம் தொடந்தும் இலங்கை பிரஜையாக இருக்க விரும்பி, ஆனால் அவ்வாறு தனது விருப்பத்தை அறிவிக்கத் தவறி இருந்தால், நான்காவது பந்தியில் குறிப்பிட்ட படி அவசியம் செய்துகொள்ளவும்.